<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

<u>அ.வ.எண்.49/2010</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரராஜன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | சுப்ரமணியன் | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 24.3.2022 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.5 | | |

இன்று 24.3.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் ஓமலூர் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். வா.சா.ஆ.12 அறிவிப்பு எங்களது அலுவலகத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.12 ல் ஆலமரத்துப்பட்டி கிராம சர்வே எண்.277/5, 277/6 பி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.277/5 க்கு பட்டா எண்.5 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.12 ல் Reputed Owners என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதற்கு சம்மந்தப்பட்ட நில உரிமையாளர்கள் என அர்த்தம். Reputed Owners என்பது நில ஆர்ஜித சட்டப்படிக்கும், வருவாய்த்துறை நிலை ஆணைகள் படிக்கும் பிரதிநிதித்துவ உரிமையாளர் என்றால் ஆமாம். அதில் உரிமையாளர்கள் என அத்தாயம்மாள், செங்கோடகவுண்டர் மற்றும் ராமசாமி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் 2, 3 தரப்பினர்களின் தகப்பனார் பெயர் சின்ன நாச்சியப்பகவுண்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 12.01.2000 ல் ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 12.01.2000 ல் மேற்கண்ட மூன்று நபர்களும் ஆஜரானார்கள் என்றால் பதிவு தபால் அனுப்பியுள்ளார்கள். நேரில் ஆஜரானதாக குறிப்புகள் இல்லை. அவர்கள் அனுப்பிய ஆட்சேபணை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. அது சா.சா.ஆ.1 முதல் 3. அந்த ஆட்சேபணையை மறுத்து 12.02.2000 ல் சேலம் மாவட்ட அரசிதழில் நில ஆர்ஜிதம் செய்வதாக வெளியிடப்பட்டது என்றால் ஆமாம். அந்த அரசிதழில் சர்வே எண்.277/5 மற்றும் 277/6 பி–க்கு உரிமையாளர்கள் அத்தாயம்மாள், செங்கோட கவுண்டர் த/பெ. சின்ன நாச்சியப்ப கவுண்டர், ராமசாமி த/பெ. சின்ன

நாச்சியப்ப கவுண்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் மாவட்ட ஆட்சியரின் உத்தரவு தேதி 04.02.2000. ஆனால் அரசிதழில் வெளியான தேதி 12.02.2000. என்னிடம் காட்டப்படுவது அந்த அரசிதழ் என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.17. அந்த நில ஆர்ஜிதத்தை எதிர்த்து அத்தாயம்மாள் நீதிப்பேராணை மனு எண்.6207/2000 தாக்கல் செய்தார் எனவும், அதற்கு தனிவட்டாட்சியர் தாக்கல் செய்த எதிருரை என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது. அந்த எதிருரையில் மயான பாதைக்கு நிலம் தேவை எனவும், உரிமைதாரர்கள் அதற்கான இழப்பீடை தருவதற்கு மட்டும் உரிமையுள்ளவர்கள் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படுவது நீதிப்பேராணை மனு எண்.6207/2000–ன் உத்தரவு என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.18. ஆனால் அதில் அந்த பணியை விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவில் நில உரிமையாளர்கள் இழப்பீடு தான் பெற உரிமையுடையவர்கள் எனவும், நில ஆர்ஜிதம் செய்தது சரி என உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த நடவடிக்கைக்கு பிறகு கே.ஆர்.மணி கொடுத்த ஆட்சேபணைக்கு குறிப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த குறிப்பாணை என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.19. வா.சா.ஆ.19 ல் ந.க.எண்.1865/92 அ, நாள்.03.04.2009 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். உத்தரவில் 9 வது வரியில் புல எண்.277/5 மற்றும் 277/6 பி–க்கு உரிமையாளர்களான அத்தாயம்மாள் க/பெ. சின்ன நாச்சியப்பகவுண்டர், செங்கோடகவுண்டர், ராமசாமி அவர்களின் தகப்பனார் பெயர் சின்ன நாச்சியப்பகவுண்டர் ஆகிய 3 நபர்களும் நில எடுப்பை ஆட்சேபித்து மனு செய்துள்ளார்கள் எனவும், இழப்பீட்டு தொகை பெற்றுக்கொள்ள மறுத்ததால் சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டதாகவும், நில ஆர்ஜித நடவடிக்கை முடிவு பெற்றதால் நீதிமன்றத்தில் உரிய பரிகாரம் தேடிக்கொள்ள கூறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.19 நில ஆர்ஜித குறிப்பாணைக்கு எதிராக நில ஆர்ஜித ஆணையாரிடமோ, நில நிர்வாக ஆணையரிடமோ அல்லது உயர்நீதிமன்றத்திலோ மேல்முறையீடு செய்து அது ரத்து செய்யப்படாமல் தற்போதும் உள்ளது என்றால் ஆமாம். மேல்முறையீடு செய்துள்ளாரா, இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியாது. கோப்புகளில் மேல்முறையீடு செய்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

<u>2, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு வந்த அழைப்பாணையில் சர்வே எண்கள்.852, 140 ஆகியவை குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். வழக்கு சர்வே எண்.852, 140–க்கு நடப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.277/5, 277/6 பி–யை எடுக்க கூடாது என அத்தாயம்மாள் மற்றும் அவருடைய மகன்கள் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தனர் என்றால் ஆமாம். அந்த நீதிப்பேராணையில் அனைத்து நீதிப்பேராணை மனுக்களையும் குறிப்பிட்டு தள்ளுபடி செய்யப்பட்டும், மாவட்ட ஆட்சியர் நில ஆர்ஜித நடவடிக்கைகளை விரைந்து முடிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வ.சா.ஆ.18 ல் 19 வது பத்தியில் Writ is Misconceive and Devoid of merits என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 16.12.2000 ல் அந்த நீதிப்பேராணையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். சொத்துக்களில் உரிமை உள்ளது என கே.ஆர்.மணி ஆட்சேபணைக்கு நாங்கள் கொடுத்த குறிப்பாணை தான் வா.சா.ஆ.19 என்றால் ஆமாம். கே.ஆர்.மணிக்கு நாங்கள் அளித்த குறிப்பாணையில் அவர் உரிமைமூல ஆவணங்களை காண்பித்து நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு கூறியுள்ளோம் என்றால் ஆமாம். சா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் எங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. சர்வே எண்.277/5, 6 பி–யில் எவ்வளவு விஸ்தீரணம் என குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். சா.சா.ஆ.1 முதல் 3 வரையில் உள்ளவைகளில் அனுப்புதல் மற்றும் கையெழுத்தை தவிர மற்றவைகள் அனைத்தும் ஒன்றானது என்றால் ஆமாம். நாங்கள் வைப்பீடு செய்த இழப்பீடு தொகை தற்போதுவரை எடுக்கவில்லை என்றால் எடுத்ததற்கான எவ்வித ஆவணங்களும் எங்களிடம் இல்லை. சேலம் மாவட்ட அரசிதழில் பிரச்சினைக்குரிய சர்வே எண், பட்டா எண் உள்ளதா என்றால் பட்டா எண் இல்லை. சர்வே எண்.277/5 ன் பார்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசிதழில் 277/5 பி என்ற சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அரசிதழில் பழைய சர்வே எண்.277/1 மற்றும் 277/6 ஏ–விற்கு சர்வே எண்.277/5 பி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.277/5–க்கு அத்தாயம்மாள் பெயரில் உள்ளதற்கு ஏதேனும் ஆவணங்கள் கொடுத்துள்ளார்களா என்றால் அ பதிவேடு நகல் உள்ளது. என்னிடம் கொடுக்கப்பட்ட அ பதிவேட்டின்படிக்கு சர்வே எண்.277/5 க்கு பழைய சர்வே எண்.140 மற்றும் 141

என்றால் ஆமாம். 31.01.2008 ல் தனிவட்டாட்சியர் அலுவலகம், ஓமலூர் கே.ஆர்.மணியின் ஆட்சேபணையின் பேரில் யார் இழப்பீட்டை பெற உரிமையுள்ளவர் என நிர்ணயம் செய்ய செங்கோடன் தம்பி சகல ஆவணத்துடன் 7 நாட்களுக்குள் ஆஜராக வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு ஆஜராக தவறினால் சின்ன நாச்சியப்ப கவுண்டர் (எ) நாச்சியப்பன் மகன் ராமசாமி என்பவருக்கு இழப்பீடு தொகையை வழங்க பரிந்துரை செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கே.ஆர்.மணி, ராமசாமி ஆகியோருக்கு அது அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படுவது அந்த ஆவணம் என்றால் அது பி.வா.சா.ஆ.4. அதன்படிக்கு ராமசாமி எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.4–ன்படிக்கு செங்கோடன் தம்பி ஆவணங்களை சமர்ப்பிக்காததால் சின்ன நாச்சியப்பகவுண்டர் (எ) நாச்சியப்பன் மகன் ராமசாமி தான் உரிமையாளர் என்றால் ஆமாம். செங்கோடன் வகையறா உரிமையிருந்திருந்தால் அந்த தொகையை எடுத்திருப்பார்கள் என்றால் விருப்பம் இருந்திருந்தால் எடுத்திருப்பார்கள். சின்ன நாச்சியப்பகவுண்டர் (எ) நாச்சியப்பன் மகன் ராமசாமி தான் கூட்டுப்பட்டாதாரர் எனவும், அதனால் தான் அவர்கள் பணத்தை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.277/5, 6 பி–க்கு உண்மையான உரிமையாளர்கள் என செங்கோட கவுண்டரோ, ராமசாமியோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் கோப்பில் இல்லை.

<u>அனுமதியின் பேரில் மீண்டும் முதல் விசாரணை</u>

பி.வா.சா.ஆ.4–ன் படிக்கு சின்ன நாச்சியப்ப கவுண்டர் (எ) நாச்சியப்பன் மகன் ராமசாமிக்கு இழப்பீட்டு தொகை பெற பரிந்துரைத்துள்ளோமா என்றால் இல்லை.

5, 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.